ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்**

31.07.2025

1. தவமோடு தருமத்தை தானாய் புகட்டி
தானென்ற கர்வத்தை நித்தம் விரட்டி
அவதாரம் எடுத்து ஆறுமுகனார்
ஆட்கொள்ள அரங்க ஞானியாக

2. ஆகவே கலியில் பிரணவக் குடிலை
அனைத்து ஞானிகள் கூடுகின்ற
மகா சபையாக படைத்து அருளி
மக்களை வழிநடத்தும் அரங்கன் யானும்

3. யானுமே விசுவாவசு ஆண்டு நள்ளிதிங்கள்
உயர்வான சூல குருவார அருளாசி
ஞானம்பட அருட்சுவடி வழியில்
நன்மக்களாக உலகோர்க்கு உரைப்பேன்

4. உரைக்கவே ஞானமதை தேடி
உலகெல்லாம் அலையா மக்களே
மறை போற்றும் பிரணவக்குடிலை
மனமுவந்து நாடி வருகை தந்து

5. தந்துமே சோதி சொரூபமான
தவசி எந்தனை வணங்கி
சிந்தை குளிர செபதபங்கள்
செய்துமே ஞானிகள் பூசை கலந்து

6. கலந்துமே அரங்கன் யான் தரும்
கந்தவேலன் அருளமுது உண்டு
வலம் வந்து குடிலை வணங்கி
வல்லமையான அன்னதான சேவையில்

7. சேவையில் பொருளுதவி நின்று
சுத்த சைவ நெறிதனை ஏற்று
அவணியில் ஞானிகள் பூசை
அனுதினமும் செய்ய வேண்டி

8. வேண்டியே என் சீடன் ராம்குமார்
வினவிட அவன் கரம்பட
தொண்டர்களும் உலக மக்களும்
தேடிவருபவர்களும் தீட்சை ஏற்று

9. ஏற்றுமே பூசை தொடர
என் சக்தி உடன் இருந்து
ஆற்றலாய் விரும்பும் மாற்றம்
அகிலத்தில் கண்டு உயர நேரும்

10. நேருமை தருமம் தயவு பலம்
நிலவுலகம் நல்ல தலைமை
வறுமை இல்லா ஆளுமைகள்
வையகம் கண்டு சிறந்திட

11. சிறந்திட ஞானிகள் பூசைமுறை
சிறப்பாக மக்கள் செய்துவர
பரந்த பேருலகில் ஞான ஆட்சி
பாதுகாப்பாய் அமைந்து மாற்றம் காணும்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி